கொழும்பு விவேகானந்த சபைப்பிரசுரம்.

# அப்பர்சுவாமிகள் தேவாரச் சிறப்பு.



ஸ்ரீ. சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள்

செய்தது.

1931.

பிரதிகள் 1000] [விலை சதம் 10.

172

129

உ

சிவமயம்.

# அப்பர் சுவாமிகள் தேவாரச் சிறப்பு.

இஃது

விக்ரோறியாக் கல்லூரித் தலைமையாசிரியர்

ஸ்ரீமத். சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள்

கொழும்பு விவேகானந்தசபையிலே செய்த உபந்நியாசத்தைத்

தழுவி எழுதப்பட்டு

ஷ சபையால்

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரசோற்பத்தி ஞூ ஆவணி மீ.

குறிப்பு:— அப்பர் சுவாமிகள் தேவார நயத்தை ஆராயப் புகுவோர்க்குத் துணையாகு மென்றெண்ணி ஸ்ரீமத். சே. வெ. சம்புலிங்கப்பிள்ளையவர்கள் எழுதிய திருச்சரிதச் சுருக்கத்தை இதனோடு சேர்த்துள்ளோம்.

கொழும்பு விவேகாநந்தசபை.

உ

சிவமயம்.

# அப்பர் சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்.

அப்பர் சுவாமிகள் திருமுனைப்பாடி நாட்டிலே யுள்ள திருவாமூரிலே வேளாளகுலத்தைச் சேர்ந்தவர். இவருடைய முதற்பெயர் மருணீக்கியார். இவர் தந்தையார் புகழனார்; தாயார் மாதினியார்; தமக்கையார் திலகவதியார். இவர் குழந்தையா யிருந்தபோதே தாய்தந்தையர் சிவபதமடைந்தனர். ஆயினும் இளமையிலேயே இவர் சகல சாத்திரங்களையும் படித்து வல்லவரானார். இவருக்கு யாதொரு குறைவுமில்லாமல் தமக்கையாராகிய திலகவதியார் துணை செய்து வந்தார்.

மருணீக்கியார் சரீரமும் செல்வமும் நிலையில்லாதவைகளென்று நினைத்துப் பல தருமங்களைச் செய்துவந்தார். இவ்வுலக வாழ்க்கை மண்ணுவது திண்ணமாதலால் மாயமானது என்று கண்டு இல்வாழ்க்கையை வெறுத்தார். ஆயினும் திருப்பாதிரிப்புலியூர் என்னும் நகரத்தை யடைந்து சமணர்களோடு சேர்ந்து அவர்களுடைய போதனையிலே மயங்கிச் சமணசமயமே மோட்சத்தைத் தரத்தக்கது என்று நினைத்து அதிற் புகுந்தார்*. அச்சமய நூல்களையெல்லாம்

---

* "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன், உண்மை யறிவே மிகும்" என்னுந் திருக்குறள் இங்கே நோக்கத்தக்கது.

கற்றுத் தேர்ச்சிபெற்றுப் புத்தர்களுடன் வாதஞ் செய்யத் தக்க சாமர்த்தியம் உடையவராய்ச் சமண சமயக் குருவாக விளங்கினர்.

இவர் இப்படி யிருக்க, இவருடைய தமக்கையாராகிய திலகவதியாரோ திருவதிகை வீரட்டானம் என்னுங் கோயிலிலே திருத்தொண்டு செய்துகொண்டு வந்தார். ஒருநாள் தம்முடைய தம்பியாரது நிலைமையை நினைத்து வருந்தி அவரை மறுபடியும் சைவசமயத்திற்குத் திருப்பவேண்டுமென்று நினைத்துச் சிவபிரானை வழிபட்டார். அப்பெருமானது திருவருளால் மருணீக்கியாரது வயிற்றிலே கொடிய சூலைநோய் உண்டானது. அந்நோய் அவரை மிக வருத்தியது. எவ்வித வைத்தியத்தினலும் அது தீராமல் நின்றது. சமணர்களெல்லாரும் அவரைக் கைவிட்டனர். அத்தருணத்தில் அவர் தம்முடைய சகோதரியாருக்குத் தமது நோயைப்பற்றி தெரிவித்தார். திலகவதியார் சமணர்களுடைய பள்ளிக்குத் தாம் வாமுடியாதென்று மறுத்துவிட்டார். அதனல் அவர் தம்முடைய சகோதரியாரிடம் போக நினைத்தார். அவ்வாறே ஓர் இரவில் ஒருவருங் காணுதபடி தம்முடைய தமக்கையாரது திருமடத்தை அடைந்து அவரது கால்களில் வீழ்ந்து வணங்கித் தம்மைக் காத்தருளும்படி வேண்டினர்.

வேண்டவும், தமக்கையார் பிறவிப்பிணி முதலிய சகல பிணிகளையும் நீக்க வல்ல வைத்தியநாதராகிய சிவபெருமானையே வணங்கும்படியும், அவருக்கே தொண்டு பூணும்படியும் உபதேசித்து விபூதி பூசினர். மறுநாட் காலையிலே அவரை அழைத்துக்கொண்டு திருவதிகைவீரட்டானத்துச் சிவாலயத்திற்குப் போனபோது மருணீக்கியாருக்குத் தமிழ் பாடும் வல்லமை உண்டாகவும், அவர் வீரட்டானேசுரர்மீது "கூற்றுயினவாறு" என்னும் திருப்பதிகம்பாடியருளி

ஞர். உடனே சூலைநோய் நீங்கியது. இவருடைய பாடல்கள் இனிமை மிகுந்து விளங்கினமையால், இவருக்கு "நாவுக்கரசு" என்னுங் காரணப்பெயர் கடவுளால் இடப்பட்டது. நாயனார் மனம், மொழி, மெய்களால் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்துவந்தார்.¶

சுவாமிகளுடைய செய்கையைக் கேள்விப்பட்ட சமணர்கள் இவர்மீது பொறாமைகொண்டு இவரை அழைப்பித்துத் தண்டிக்கும்படி அரசனிடம் முறையிட்டார்கள். அவன் அப்படியே சுவாமிகளை வருவித்துச் சுண்ணப்பு அறையில் இடுவித்தான். எழுநாள் கழித்து அந்த அறையைத் திறந்து பார்க்க, நாயனார் சிறிதும் வருத்தமின்றியிருந்ததைக் கண்டு அதிசயப்பட்டான். அதன் பின் அவருக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தார்கள். நஞ்சும் அமுதமாயிற்று. அதனைக் கண்டும் மனம் அடங்காமல் அவரைக் கொல்லுதற்கு யானையை அனுப்பினார்கள். அவர் ஒருபதிகம் பாடினஅளவில் கொல்லவந்த யானை அவரை வணங்கிச் சென்றது. கடைசியாக அவரைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளினார்கள். நாயனார் சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்கரத்தை நினைத்து "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே' என்று திருப்பதிகம் பாடக் கல்லே தெப்பமாகக் கரையேறினார்.‡ இதை யறிந்த பல்லவராஜன் இவரை யடைந்து வணங்கிச் சைவனானான்.

---

¶ சரியை கிரியை யோகமாகிய மூன்றும் எதுவும் ஞானிகள் செய்யத் தக்கதாதலால் அப்பர் சுவாமிகள் சரியைச் சிவபுண்ணியத்துள் உழவாரத் தொண்டு செய்தருளினார்.

‡ இவர் கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பம் என்று வழங்குகிறது. இது திருப்பாதிரிப்புலியூருக்குச் சமீபத்திலுள்ளது.

பின்பு, அவர் அநேக சிவாலயங்களைத் தரிசித்துக் கொண்டு பெண்ணாகடத்தை அடைந்தார். அங்குக் கோயில் கொண்டுள்ள சிவக்கொழுந்தீசர் அப்பர்சுவாமிகள்மீது சூலக்குறியையும் இடபக்குறியையும் அவர் வேண்டுகோட் கிசையப் பொறித்தருளினார். பின்னர்ச் சிதம்பரம் முதலிய திருப்பதிகளுக்குச் சென்று திருப்பதிகம் பாடினார்.

ஒருநாள் அவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரது மகிமையைக் கேள்வியுற்று அவரைக் காண விரும்பிச் சீர்காழிக்குப் போனார். சுவாமிகளது வருகையை அறிந்த பிள்ளையார் அவரை எதிர்கொண்டார். திருநாவுக்கரசர் பிள்ளையாரை விழுந்து பணிய, அவர் இவரைத் தூக்கி 'அப்பரே, என்று சொல்லி வணங்கினார். அது முதல் இருவரும் பல சிவஸ்தலங்களுக்கு ஒன்றாகப் போய்ப் பதிகம் பாடி வந்தார்கள். திருச்சத்திமுற்றத்தை அடைந்தபோது அப்பர் தம்மீது திருவடி சூட்டியருளும்படி சிவபெருமானை வேண்ட, அவர் அவ்வாறே திருநல்லூரில் அருள் புரிந்தார்.

திங்களூரிலுள்ள அப்பூதியடிகள், சுவாமிகள் பெயரால் பல தருமங்கள் செய்திருந்தமையைக் கேள்வியுற்றுச் சுவாமிகள் அவ்விடம் போனார். அவர் அப்பமூர்த்திகளைப் போசனத்திற்கழைத்துவிட்டு, தம் மூத்த மகனை வாழையிலை கொண்டுவரும்படி அனுப்பினார். வாழையிலைக்காகச் சென்ற அப்பூதியாரது மூத்தமகன் பாம்பு கடித்து இறந்தான். அவன் இறந்ததற்காகக் கவலையுறாமல் திருநாவுக்கரசருக்கு அமுது படைத்தலே பெரும் பணியாகக் கொண்டு அந்நாயனாரும் அவர் மனைவியாரும் சுவாமிகளைத் திருவமுதுக்கு அழைத்தனர். சுவாமிகள் அங்கு நிகழ்ந்ததைத் திருவருளால் அறிந்து ஒரு திருப்பதிகம் பாடி இறந்த மகனை

உடனே எழுப்பியருளினார். சுவாமிகள் அப்பூதியடிகளது திருத்தொண்டை ஒரு திருப்பதிகத்திலே வியந்து பாராட்டியுமுள்ளார்.*

சில காலத்திற்குப் பின், அப்பர்சுவாமி சம்பந்தசுவாமியோடு வேதாரணியத்துக்குப் போனார். அவ்வாலயத்திற்குப் போனபோது, வேதங்களால் அருச்சித்துத் திருக்காப்பிடப்பட்ட கதவு அந்நாள்வரையில் அடைக்கப்பட்டேயிருந்தமையைக் கண்டார்கள். அதைத் திறப்பிக்க எண்ணி, அப்பர்சுவாமிகள் திருப்பதிகம் பாடினார்.

பின் பிள்ளையார் மதுரைக்குப் போக அப்பமூர்த்திகள் திருவானைக்கா முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் சென்றார். வழியிலே பசியுந் தாகமும் உண்டாயின. இவைகளை நீக்கத் திருவுளங்கொண்ட சிவபெருமான், வழியிலே ஒரு சோலையுங் குளத்தையும் உண்டாக்கி, பிராமணவேடம் பூண்டு வந்து இவருக்குப் பொதிசோறு கொடுத்தருளினார். அதன்பின்பு திருக்காளத்தி முதலிய தலங்களைத் தரிசித்தார். திருக்காளத்தியில் இருக்கும்போது உத்தரகைலாசத்தைத் தரிசிக்க விரும்பினார். அங்கிருந்து புறப்பட்டுக் காசி முதலிய வடநாட்டுத் திருப்பதிகளை வணங்கிக்கொண்டு இமயமலைச்சாரலிலுள்ள o திருக்கைலாசகிரியை நோக்கி இடைவிடாது நடந்து சென்றார். பருக்கைக் கற்கள் நிறைந்த மலைச்சாரல் வழியாக நடந்து செல்லுவதால் தமது தேகத்துக்கு

---

* “அழலோம்பும் அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே”.

o திருக்கைலாசம் இரண்டு உண்டு, ஒன்று கங்கையாற்றிற்கு வடக்குத்திசையிலுள்ள திருக்கைலாசமலை; மற்றையது ஸ்ரீ கண்டபரமசிவன் எழுந்தருளியிருக்கும் பரமாகாசமாகிய சிவலோகம்.

நேரிடும் துன்பங்களையும் நினையாமல் கைலாசகிரியை எப்படியாவது தரிசித்தே தீரவேண்டுமென்னும் திடமான கருத்துடையவராய்ப்போனார். பின்னரும் இவரைத் தமிழ்நாட்டிற் செலுத்தத் திருவுளங்கொண்ட சிவபெருமான் இவரை அழைத்துத் தாம் உத்தரகைலாசத்தில் எழுந்தருளியிருக்குந் திருக்கோலத்தைத் திருவையாற்றிற் காட்டுவதாகவும், அருகிலுள்ள தடாகத்தில் முழுகித் திருவையாற்றை அடையும்படியும் பணித்தருளினார். நாயனார் அவ்விதமே அப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றை அடைந்து அங்கே திருக்கைலாசக் கோலத்தைத் தரிசித்தனர்.

அப்பால், சம்பந்தசுவாமிகளை மறுபடியும் சந்தித்து அவருடன் சிலகாலம் இருந்தார். அவர் தொண்டைநாட்டை நோக்கிச் செல்லவும், இவர் பாண்டிநாட்டுக்குச் சென்றார். பல்சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு கடைசியாகத் திருப்புகலூரை அடைந்தார் அங்கே ஒவ்வொரு நாளும் கைத்தொண்டு செய்துகொண்டிருந்தார். அப்போது இவரது வைராக்கியத்தை யாவருக்குங் காட்டுதற்குத் திருவுளங்கொண்ட சிவபிரான் இவருக்கு முன்பாகப் பொன்னும் நவரத்தினங்களும் பிரகாசித்துக் கிடக்கும்படி அருள்செய்தார். நாயனார் அவைகளை வீண்கற்களாக மதித்தார்.

சுவாமிகள், இவ்விதம் திருப்புகலூரில் வசிக்கும் பொழுது ஒருநாள் சிவபிரான் திருவடி நீழலையடைய வேண்டுமென்னுங் கருத்துத் தோன்ற ஒரு திருப்பதிகம் பாடியருளினார். இவர் எண்ணத்தின்படி பூம்புகலூர்மேவிய புண்ணியனாகிய சிவபெருமான் இவருக்கு முத்தி கொடுத்தருளினார். அவ்வாறு இவர் முத்தியடைந்த தினம் சித்திரைச் சதயமாகும். அப்போது இவருக்கு வயது ௮௧.

நம் சுவாமிகளை ஆளுடைய அரசு, வாகீசர், தாண்டகவேந்தர் என்றும் அழைப்பதுண்டு. இவர் அருளிய பாடல்

களுக்குத் தேவாரம் என்று பெயர். இவரது பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகளாக வழங்கப்படுகின்றன. இவரது திருவருட்பாக்கள் ஓதுவார்க்கும் கேட்பார்க்கும் அன்பை வளர்த்துக் கருங்கன்மனமும் கரைந்துருகச் செய்யும் மேன்மை வாய்ந்தவை. இவர் அருளிச்செய்த திருப்பதிகத் தொகை சகூரு. அவற்றுள் இப்போது வழங்குவன ௩௧௧. இவரது பாடல்பெற்ற தலங்கள் ௧௨௫.

சுவாமிகள் காலத்தில் வசித்திருந்த மெய்யடியார்கள்:- திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகர், திருநீலகண்டயாழ்ப்பாணர், குங்குலியக்கலயர், குலச்சிறையார், நின்றசீர்நெடுமாறர், மங்கையர்க்கரசியார் முதலியோர்.

அப்பூதியடிகள் இந்நாயனாரது திருப்பெயரை ஓதி § வழிபடுதல் ஒன்றினாலேயே முத்தியடைந்தாரென்றால் இவர் பெருமையை என்னென்று கூறுவது!

இந்நாயனார் சரித்திர விரிவைப் பெரியபுராணத்திற் காண்க.

"இடையறாப் பேரன்பு மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்காமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகுந் துதித்துவாழ்வாம்."

திருச்சிற்றம்பலம்.

---

§ உற்றாலன் தவம் தீயினின்றானலன் ஊணுண்புனலா
அற்றாலன் றகர்வுந் திருநாவுக்கரசெனுமோர்
சொற்றான் எழுதியுங் கூறியுமே என்றுந் தன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகைப்ப.

சிவமயம்.

# அப்பர்சுவாமிகள் தேவாரப்பண்பு.

எங்களுடைய நல்லொழுக்கத்துக்கும் நல்வாழ்வுக்கும் மனத்தூய்மை இன்றியமையாதது. ஆசை, கோபம், அகந்தை ஆகிய மூன்று குற்றங்களும் எங்கள் மனத்தூய்மையைக் கெடுத்து, எங்களைப் பிழைவழிகளிலே செலுத்தி எங்கள் நல்வாழ்க்கைக்குக் கேட்டை விளைக்கின்றன. இக்குற்றங்களை நீக்குதற்கு மெய்யறிவும் மெய்யன்பும் வேண்டும். இவ்விரண்டையும் எமக்குத் தரத்தக்கவர்கள் சிவமும் சிவத்தன்மையையடைந்த சிவனடியார்களுமே. இவர்களை நினைத்தலாலும் துதித்தலாலும் வணங்குதலாலும் மெய்யன்பையும் மெய்யறிவையும் பெறலாம். மெய்யறிவும், மெய்யன்பும், மெய்யின்பமே வடிவமாயுள்ள அந்த ஒரு பொருளை நாம் நினைக்கக்கூடுமானால், உலகம் பொய்ப் பொருளாய் மறையும். மறையவே உலகப்பொருள்களிலுள்ள ஆசையும், உலகப் பொருள்களை யுடையராயிருத்தலா லுண்டாகும் அகந்தையும் உலகச்செயல்களில் நமக்கொவ்வாதவற்றா லுண்டாகுங் கோபமுந் தாமாகவே நீங்கும்.

ஆயினும் சிவபெருமானை உள்ளபடிநினைப்பது மெய்யறிவுடையோரால் மாத்திரங் கூடும். எம்மைப்போன்ற சிறு தரத்தினர்க்கு அவரை நினைக்கும் ஆற்றலில்லை. அவர் மனத்துக்கெட்டாதவர். ஆதலால் அந்தப் பரம்பொருளின் நிலையை அடைந்த சிவனடியாரே நாம் உண்மை வழியிற் செல்லுதற்கு எமக்குத் துணை செய்யத்தக்கவர். அவர்களைத் தியானித்தல் எங்களால் இயலும். அவர்கள் எங்களைப்போலவே உலகத்திற் பிறந்து எங்களில் ஒருவராக வாழ்ந்துவந்தவர்கள். மனிதவடிவத்தை எடுத்தவர்களெவரையும் நாங்கள் மனசிற் பதிக்கவும், நினைக்கவும், மனத்தில்

வைத்து வைத்து அன்புகூர்ந்து கொண்டாடவும் இயலும். இவ்வாறாகவே எங்கள் தாய்தந்தையரையும் மனைவிமக்களையும் சகோதரர்நண்பர்களையும் அவர்கள் எங்கள் முன்னிலையிலில்லாதபோது நினைத்து நினைத்துக் களிகூருகின்றோம்.

ஆகவே, எங்களைத் தூயவராக்கிக்கொள்ள விரும்புவோமானால் நாம் சிவனடியாரை வழிபடவேண்டும். மெய்யறிவினராகிய பெரியோர்களுக்குச் சிவவழிபாடு எத்துணைப் பொருத்தமானதோ, எமக்குச் சிவனடியார் வழிபாடு அத்துணைப் பொருத்தமானதாம். சிவனடியார்களே எம்மைச் சிவபெருமானோடு சேர்க்கத்தக்கவர்கள். இக்கருத்தைச் சைவநூல்களிற் பல இடங்களிற் காணலாம். பழகிய மானின் துணையைக்கொண்டு பழகாத மானை வேடுவன் பிடிப்பதுபோலச் சிவனடியார்களைக்கொண்டு சிவனடியாராகாத மனிதரைச் சிவபெருமான் பிடிப்பாரென்று உமாபதி சிவம் திருவாய்மலர்ந்தருளினர்:—

"பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடிப்பதற்காம்
போர்வையெனக் காணா புலி".

திருநாவுக்கரசுசுவாமிகளும் சிவனடியாராகாதவர்கள் சிவனடியாரை வழிபட்டே ஈடேறவேண்டுமென்று பாடியருளினர்:—

ஆளா காராளா னாரை யடைந்துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே.

ஆதலால் சிவனடியார்வழிபாடே எங்களுக்கு உரிமையான வழிபாடென்று நாங்கள் கொள்ளவேண்டும். அவர்களை ஆர்வத்தோடு நினைத்தலாலும், அவர்களுடைய அற்புதவாழ்வையும் திருவாக்குகளையுஞ் சொல்லுதல் கேட்டல் சிந்தித்த

லாலும் நாங்கள் படிப்படியாக அவர்களுடைய நிலையைச் சென்றடைவேம். அவர்களுடைய திருவாக்குகள் எம்மைப்போன்ற சாதாரண மனிதர்களுடைய வாக்கைப் போன்றவை யல்ல. அவை திருவருள் பதியப்பெற்றவை. உதாரணமாக ஒரு சாதாரணமான கல்லும் சிவலிங்கமும் கல்லென்ற வகையி லொத்திருப்பினும், சிவலிங்கம் எவ்வாறு திருவருட்பொலிவு பெற்றதாய் விளங்குமோ, அவ்வாறே அவர்களுடைய திருவாக்குகளும் சாதாரணமாக நாம் வழங்கும் சொற்கள் விரவியிருப்பினும், திருவருள்மயமாய் விளங்குவன. இதனால் அவைக்குத் திருவருட்பாவென்ற சிறப்புப்பெயருண்டு. அவை திருவருட்பாக்களாதலால் அவற்றின் பொருளை யுணராது அவற்றை ஓதுவார்க்கும் அவை பலனைக் கொடுக்தும். எதுபோலவெனில், ஒரு மருந்தினுடைய குறைகுணங்களை யறியாதாரும் அதனை உட்கொள்வார்களானால் அது அவர்களிடத்திலுந் தனது இயல்பான தொழிலைச் செய்யும். இதுவே திருவருட்பாக்களுக்கும் ஏனைய பாக்களுக்குமுள்ள முக்கியமான வேறுபாடாம்.

எண்ணில்லாத சிவனடியார்களுள் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சமயாசாரியர்களெனச் சிறப்பாகப் பாராட்டப்படுவர். இவர்களுள் ஒருவரைச் சைவர்களாகிய நாங்கள் எங்கள் வழிபாட்டிற்குரியவராகத் தெரிந்துகொள்வது கடனாகும். சிலர் அப்பரிலும், சிலர் சுந்தரரிலும், சிலர் மாணிக்கவாசகரிலும், சிலர் சம்பந்தரிலும் விசேஷ அன்புடையவர்களாகி இவர்களைத் தாம் வழிபடுமூர்த்திகளாகக் கொண்டு ஒழுகுவர். இப்படியாக இச்சித்தற்குக் காரணம் பலவகைப்படும். சிறுவயதிலே எவருடைய சரித்திரம் கல்வி கேள்விகளால் ஒருவரது மனத்திற் பதிந்ததோ அவர் அவரது மனத்தை நிறைத்துக் கொண்டு நிற்பர். எவருடைய வாழ்க்கை ஒருவருடைய

மனசை வசீகரிக்கின்றதோ அவர் அவருடைய இஷ்ட மூர்த்தியாய் வழிபடப்படுகின்றார். ஆயினும் பெரும்பாலாரைக் கவருபவர் அப்பரே. சம்பந்தசுவாமிகள் மூன்றுவயசிலே ஞானப்பாலை யுண்டு சிவகுமாரராகி எங்களைப்போன்றவர்களுடைய நிலையைக் கடந்தார்; அன்றியும் பதினாறு வயதில் மனிதஉடம்பையும் ஒதுக்கிவிட்டார். எமக்கும் இவருக்கும் வெகு தூரம். சுந்தரர் சிவபிரானோடு தோழமை பூண்டு அவரைக்கொண்டு ஏவல் செய்வித்தவர். அந்த உன்னத நிலை எங்களுக்கில்லை. மாணிக்கவாசகர் மந்திரிப் பதவியிலிருந்தபோது அவரை யாட்கொள்ளுங் காலம் எப்போது வருமென்று சிவபெருமான் எதிர்பார்த்து நின்றருளினார். அவர் அவ்வளவாகப் பழுத்த பழம். அப்பர்சுவாமியோவென்றால் தமது காலம் முழுதும் எங்களைப்போல வாழ்ந்தவர். எங்களைப்போலப் புறக்கொள்கைகளை யுடையவர்களுடைய வலையில் அகப்பட்டவர். பலவகையான இடர்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளானவர். எண்பத்தொருவருஷகாலம் மனிதசரீரத்தோடிருந்து உலக இன்ப துன்பங்களைக் கண்டவர். ஆதலால் அவரிலே அதிகமானவர்களுக்கு மனம் படிகின்றது. அவருடைய தேவாரத்திலே பலவேறுவகைப்பட்ட அநுபவங்களும், சாத்திர உண்மைகளும், போதனைகளும் விளங்குகின்றன. அப்பர் போதிக்கும் முறை அன்பில்லாதவர்களிடத்தும் அன்பை உதிக்கச் செய்வது. அவருடைய திருப்பாடல்கள் வெளித்தோற்றத்துக்கு இலகுவான நடையை உடையன. திருவருட்பாக்களில் ஞானப்பொருள் செறிந்திருத்தலால் அவைகளுக்குச் சிற்றறிவுடையோர் பொருள்சொல்லலாகாதென்பது விதி. இதற்குப் பிரமாணமாக மாணிக்கவாசகசுவாமிகளுடைய திருவெம்பாவைப் பாடலின் பொருளை உற்று நோக்கலாம். அதற்கு ஒரு சிறந்த பொருள் சென்னையிலுள்ள ஒருவரால் ஒரு திருவாசகப் பதிப்பில் எழுதப்பட்

டிருக்கிறது. அதற்கும் அதன் வெளிப்பொருளுக்கும் பேதம் மிகவுமுண்டு. அதுவே மெய்ப்பொருளென்று சொல்லு தற்கும் வழியில்லை. அதனினும் சிறந்த வேறு பொருள் அதற்கு அமைந்திருத்தல்கூடும். ஆயினும் எங்கள் சிற்றறிவுக் கெட்டியபடி சாஸ்திரவிரோத மில்லாத கருத்தை நாங்கள் எடுத்துக்கொள்வது குற்றமாகாது. இப்படியாக வெளிப்பொருளைக் கொள்ளும்வகையிலே, அப்பர் தேவாரத்தின் நடை பெரும்பாலும் இலகுவானதென்று சொல்லலாம். அவருடைய தேவாரத்தின் முதற்றிருமுறையிலும் இரண்டாந்திருமுறையிலுமுள்ள சில திருப்பாடல்களின் சிறப்பைச் சிறிது ஆராய்வாம்.

சைவசமயத்தை உள்ளபடி அறியாதார் அதை ஒரு துங்கற்சமயமென்று சொல்லுவர். அஃதாவது, சைவர்கள் மனப்பூரிப்பில்லாதவர்கள்; தாங்கள் பாவிகளென்று மனத்துன்பமும் துக்கமும் உடையவர்கள்; எல்லாம் விதிதான் என்று முயற்சிகெட்டிருப்பவர்களென்று நிந்திப்பர். உள்ளபடி பார்த்தால் சைவர்களின் நிலை இதற்கு முழுமாறுனது. அவர்கள் எப்போதும் ஆநந்தமுள்ளவர்கள், உற்சாகமுள்ளவர்கள், ஒன்றுக்குமஞ்சாதவர்கள், எல்லையில்லாத முயற்சி யுடையவர்கள், தங்களைக் கடவுளுடைய ஒரு கருவியாகக் கருதுபவர்கள். அப்படிக் கருதுவதாற் கவலையொன்று மில்லாதவராய்ப் பகைப்பொழிந்தும், சிவபெருமானுடைய கருவியாகத் தங்களைக் கொள்ளுதலால் வரும் ஆநந்தத்தால் ஊக்கமுற்றும், தங்கள் மனம் வாக்குக் காயங்களினுல் இயன்ற முயற்சியையெல்லாம் செய்தும் வாழ்வர். அதனுலேயே நயம் நட்டம், இன்பம் துன்பம் என்னும் வேறுபாடுகளையும் நோக்கார். எல்லாம் அவன் செயலென்றும் எல்லா அநுபவமும் இன்பமென்றுங் கொண்டு மனந் தூயராய் ஆநந்தம் மேலிட வாழ்வர். இந்தக் கருத்தை அப்பர் தேவாரத்தில் மலியக் காணலாம்:—

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்கலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாந்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

இவ்வருட்பாக்களிலே எங்களுக்கு அறிவும் அன்பும் இன்பமும் ஓயாமல் வளர்ந்துகொண்டிருக்குமென்பது காட்டப்பட்டது. அப்பருடைய நடையிலே உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால், ஒரு முயற்சியின் நன்மைகளை முதற் சொல்லி அதன்பின்பு அந்த முயற்சியைச் சொல்லுதல். நன்மைகளை முதற் கேட்பதால் அவைகளைத் தருஞ் செய்கையிற் பற்றும் ஊக்கமு முண்டாகும். அதனாலே அதைச் செய்தற்கு மனம் இலகுவாக உடன்படும். செய்கையை முதற் சொன்னால் அதில் இயல்பாகவுள்ள சிரமத்தினாலே அதன் மேல் வெறுப்புண்டாகும். அதன்பின் பயனைச் சொன்னாலும் அந்தப் பயன் மனத்தை வசப்படுத்தமாட்டாது. உதாரணமாக, ஒரு குழந்தைக்கு ஒரு ஏவல் சொல்லுவதானால், "நான் உனக்கு இந்த மாம்பழம் தரப் போகின்றேன்; இன்னபண்டத்தைக் கடையிலே போய் வாங்கிவா" என்று சொன்னால், மாம்பழம் தின்பதற்கு எழும் விருப்பம் பிள்ளையுடைய மனதை வசப்படுத்த அந்த ஏவல் செய்விப்பது இலகுவாகும். அப்படியல்லாமல், "இன்ன பண்டத்தை வாங்கிக் கொண்டுவா" என்று தொடங்கினால், தன்னுடைய பொழுதுபோக்கை விட்டு அந்த இடத்துக்குப் போவதில் அந்தக் குழந்தைக்கு வெறுப்புண்டாக, அவ்வளவோடே அது மாம்பழக் கதையைக் கேளாமலும் ஓடிவிடக்கூடும். அதுபோல அப்பர்

சுவாமிகளும் கோயிலுக்குப் போவதை முதற் சொன்னால் தாம் சொல்லப்போவதில் வெறுப்புண்டாகுமென்று கண்டு போவதால் வரும் நன்மைகளையே முதலிற் சொல்லுகிறார். இப்படியான இடங்களிலல்லாமல் வேறிடங்களிலும் கேட்போர் உள்ளத்தில் ஆவலை யுண்டாக்குதற்காகவும் முறைமாறிச் சொல்லியருளுவர்.

எப்போதும் இன்பமும் சுகமும் நல்வாழ்க்கையும் இருத்தலால் அவற்றால் வருவதாகிய அஞ்சாமையும் சைவருடைய இலக்கணமாம். இதை,

*நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

என்பதாலும்,

பண்பா தலப்புக்கு மால்கடன் மூழ்கிமற் றேழுலகும்
விண்பா றிசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சனெஞ்சே
திண்பா னமக்கொன் றுகண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.

என்பதாலுங் காண்க.

இப்படியான சைவ நல்வாழ்வை வேண்டுவோர்க்குத் தூய ஒழுக்கம் இன்றியமையாதாதலால் தீயவொழுக்கத்தி

---

* மாணிக்கவாசகசுவாமிகளுடைய திருவாக்கும் அப்பர்சுவாமிகளுடைய திருவாக்கும் சில இடங்களிலே சொல்லளவிலும் ஒத்திருக்கின்றன. மாணிக்கவாசகசுவாமிகள் "யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்" என்று பாடியருளினர்.—திருச்சதகம் ௫.

னின்றும் விலகுதற்கு வழிதேடுவர். தீவினையால் வருந் துன்பமும் நல்வினையால் வரு மின்பமும் உடனே யநுபவிக்கத் தக்கனவாக நேர்ந்தால் தீவினையிலிருந்து விலகுதலும் நல்வினையைச் சாருதலும் இலகுவாகும். இதற்காகத் தீவினைசெய்த காலத்திலே தம்மைத் தண்டித்தருளவேண்டுமென்றும் நல்வினை செய்த காலத்திலே உற்சாகப்படுத்தியருளவேண்டுமென்றும் அப்பர்சுவாமிகள் பாடியருளினார்:

ஓதுவித்தாய்முன்னறவுரைகாட்டியமணரொடே
காதுவித்தாய்கட்டநோய்பிணிதீர்த்தாய்கலந்தருளிப்
போதுவித்தாய்நின்பணிபிழைக்கிற்புளியம்வளரால்
மோதுவிப்பாய்உகப்பாய்முனிவாய்கச்சியேகம்பனே.

அப்பர்சுவாமிகளுக்குரிய நல்வினை சிவநல்வினையாம். ஞானவான்கள் சரியை, கிரியை, யோகம் ஆகிய சிவபணிகளைச் செய்வதுண்டு. இவை மூன்றும் வெவ்வேறு படிகளான சிவவழிபாடுகளே. இச்சிவவழிபாடு செய்தற்குரிய சரீரம் மனிதசரீரமாகும். இந்தச் சரீரத்தைத் துணையாகக்கொண்டு கடவுளை வழிபடாவிட்டால் இந்த வாழ்க்கை வீண்வாழ்க்கையாகி இந்த அரிய சரீரமும் காக்கைக்கேனும், தீ, புழு முதலியவற்றிற்கேனும், இரையாகிக் கழிந்தொழியும். இவ்வுண்மைகளை அப்பர்சுவாமிகள் பின்வரும் பாடல்களிற் காட்டிக் கடவுள் வழிபாட்டிலே எம்மைச் செலுத்த முயலுகின்றார்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சுந்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டர னாம நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

இந்த நாலு திருப்பாடல்களிலும் கடவுள் வழிபாடு ஆவசியகம் என்பதை நேரே காட்டிவிட்டு, வேறொரு பாட்டினால் எம்மை ஓர் உபாயத்தால் வழிபாட்டுக்கிழுக்கின்றார். தமக்குப் பக்கத்தாலே போன சில மனிதரை யழைத்து, "நான் ஒரு காரியம் சொல்லப்போகின்றேன், அதைக் கேட்பீர்களா?" என்கிறார். ஒரு பெரியவர் ஒரு காரியத்தைச் சொல்லுகில் அதைக் கேட்க யார்தான் மறுப்பார்? அவர் அவர்களிடத்திலே பொருள் கேட்கவில்லை, உதவி கேட்கவில்லை. இவைகளைக் கேட்டாற் சிலர் விரும்பார்கள். ஆதலால், அவர்கள் சம்மதித்து அவர் சொல்வதைக் கேட்கிறார்கள். பின்பு, "ஒரு பழந்தந்தால் அதனை நீங்கள் உண்பீர்களா?" என்கிறார். பழத்தை உண்பதற்குக் குழந்தைகள் தொடங்கி முதியோரீறாக யாவரும் மிகுந்த விருப்பத்தோடு சம்மதிப்பார். அப்படியே அவர்கள் சம்மதிக்கிறார்கள். இவர் தாம் கொடுக்கத்தக்க மிகவும் இனிமையான பழம் சிவபெருமானே என்கிறார். முன்னமே இவர் கொடுக்கும் பழத்தை உண்பேமென்று வாக்குப்பண்ணினபடியால் சிவபெருமானாகிய பழத்தை அவர்கள் உண்ணவேண்டியவர்களாகி அப்பர் சுவாமிகளுடைய சாலத்தில் அகப்படுகின்றார்கள். அந்தத் திருப்பாடல் வருமாறு:

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
யினிது சாலவு மேசற்ற வர்கட்கே.

சிவபெருமானை வணங்குந் தொழிலிலே சுவாமிகள் எம்மை யகப்படுத்திய சிறப்பாடு அவரை வழிபடவேண்டியமுறையைக் கூறுகிறார். முதலிலே சிவபெருமானிடத்தில் அன்பு வாராது. அவரை வழிபட்டுப் பழகிய பின்புதான் அவருடைய திருவருளினாலே அன்பு தோன்றும். ஆதலால் அன்பில்லா விட்டாலும் அவரை யடிக்கடி தியானிக்கவேண்டுமென்பதை ஒரு பகடியாகப் பின்வருமாறு சொல்லுகின்றார்:

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மா
னவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தா
லிவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே.

இதிலுள்ள பகடி யென்னவென்றால் சிவபெருமான் அன்பு மிகுதியால் தோன்றுபவரல்லர், ஓயாமல் அவரை யழைப்பதனாலுண்டாகும் அலுப்புக்காற்றாது அதனைத் தீர்த்தற்காகத்தோன்றுபவரென்பது. இப்படியாக ஆரம்பத்தில் அன்பின்றிக் கடவுள்வழிபாடு தொடங்க, அன்பு வந்தபின்பு அறிவும் அதற்குத் துணையாகும். அப்போது கடவுள் தோன்றி முன்னிற்பார். இதை இரண்டு உவமைகளால் விளக்கியருளுகின்றார். விறகிலிருந்து நெருப்பைத் தோற்றுவிக்க வேண்டுமாயின் ஒரு கோலிலே கயிற்றைக்கட்டி அதை முறுக இழுத்துக் கடையவேண்டும். பாலிலிருந்து வெண்ணெயெடுக்கினும் மத்தாகிய கோலைநட்டுக் கயிற்றால் முறுக இழுத்துக் கடையவேண்டும். இவைகளைப் போலவே சிவபெருமானைப் பெறவேண்டுமானால் அன்பாகிய கோலை நட்டு அறிவாகிய கயிற்றினால் இழுத்துக் கடையவேண்டும்.

2

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

சிவபெருமான் தோன்றியருள்செய்வாராயின் அதனால் வரத்தக்க பலனைச் சிறப்பாகச் சொல்லுகின்றார். மழைக் காலத்தில் தோன்றும் மின்னல் எவ்வாறு துலக்கமாகத் தோன்றுமோ அவ்வளவு துலக்கமாக வழிபாட்டின் பயனை ஒரு திருப்பாடலிற் காட்டுகின்றார். எப்படியெனில், இப்போது நாம் தேவர்களை வணங்குகின்றோம்; நாங்கள் சிவபிரானை வழிபட்டால் இந்தத் தேவர்களே எங்களை வணங்கும்படி அவர் செய்வர். நாங்கள் இவ்வழிபாட்டால் சிவமாகும் போது தேவர்கள் எம்மை வணங்கவேண்டி வருவது இயல்புதானே. இந்தக் கருத்தை,

முழுத்தழன்மேனித்தவளப்பொடியன்கனகக்குன்றத்
தெழிற்பெருஞ்சோதியையெங்கள்பிரானையிகழ்ந்திர்கண்டீர்
தொழப்படுந்தேவர்தொழப்படுவானைத்தொழுதபின்னைத்
தொழப்படுந்தேவர்தம்மாற்றொழுவிக்குந்தன்றொண்டரையே.

என்னுந் திருப்பாவிற்காண்க.

பற்றில்லாதவர்கள் பற்றைப் பெறுதற்காக வழிபடுதல் தக்கதேயன்றி, அவர்கள் பிறரால் மதிக்கப்படுதற்காக வேனும் வேறு கபட நோக்கங்கொண்டேனும் வழிபடுதல் தக்கதன்றென்று பாடுகின்றார்:—

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்கு மவர்தமை நாணியே,

இனி, மெய்யறிவு சிவபிரானது திருவருளால் வரத்தக்க தன்றி எங்களது முயற்சியால் வரத்தக்கதன்று. இதை யுணராமல் பிரமாவும் விட்டுணுவும் தங்களுடைய வல்லமை யால் பரம்பொருளைக் காணக் கருதி, பிரமா அன்னமாகவும் விட்டுணு பன்றியாகவுஞ் சென்று அறியமாட்டாமல் தியங் கினார்கள். இவ்விருவருஞ் செய்த வீண் முயற்சியை அப் பர்சுவாமிகள் ஒரு பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் பாராட்டிச் சொல்லுகின்றார். அந்தப் பதிகத்திலுள்ள விசேஷ சிறப் பென்னவென்றால் ஒவ்வொரு பாட்டிலும் இருவர் காண முயன்றார்களென்று சொன்னாரன்றி அந்த இருவர் யாரென்பதை முதலிலுள்ள பாட்டுகளிற் சொல்ல வில்லை. இறுதிப் பாட்டில்மாத்திரம் அவ்விருவர் யாரென் பதைத் தெரிவிக்கின்றார். இது வாசிப்போரில் அவாவை யுண்டாக்குதற்கு அவர் வழக்கமாகக் கையாளும் முறை.

புக்க ணைந்து புரிந்தல ரிட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்க காணலுற் றாரங் கிருவரே.

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
யெங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

இந்த உண்மையை ஒரு பகடிமுறையாகவும் வேறோரிடத் திற் பாடுகின்றார். எப்படியெனில் இவர்கள் பாடுபட்டுங் காணாத திருவடியை மார்க்கண்டனிலே பாசம்வீசிய இய மன் ஒரு சிரமமுமின்றி யறிந்துவிட்டானே யென்பது.

மேலு மறிந்தில னான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன் மாலுற்ற தேவழி பாடுசெய்யும்

பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே.

இவர்கள் காணுததற்கு ஒரு பகடி நியாயமும் சொல்லுகின்றார். சிவபெருமான் அப்பருடைய நெஞ்சிலே யிருந்தார். அவரைக்காணவிரும்பியபிரமாவும்விட்டுணுவும்அப்பருடைய நெஞ்சைத் தேடிப்பார்த்தல் வேண்டும். அங்ஙனந் தேடாது வேறிடங்களிலே தேடினவர்கள் அவரைக் காணத் தவறியது வியப்பன்று.

நாடி நாரண னுன்முக னென்றிவர்
தேடியுந் திரிந்துங் காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே.

இந்தத் திருப்பாட்டில் அப்பர்சுவாமிகள் சிவபெருமான் தமது நெஞ்சினுள்ளே இருந்தருளுகின்றார் என்று உறுதியாகச் சொல்லும் பத்தித் திறம் எம்மாற் போற்றத் தக்கது. நாம் ஒரு கினைப்பொழுதும் சிவபெருமானை மறந்திருக்க வொண்ணுதென அவர் பிறிதோர் திருப்பாட்டிலும் கூறியருளினர்.

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே.

சிவபெருமானுடைய அருள்வடிவத்தில் நாம் என்றுந் தியானிப்பனவும் இறுதியில் அடைவனவுந் திருவடிகளே என்பதை,

முருகார் நறுமல ரிண்டை தழுவிவண் டேமுரலும்
பெருகா றடைசடைக் கற்றையி னுய்பிணி மேய்த்திருந்த

இருகாற் குரம்பை யிதுநா னுடைய திதுபிரிந்தாற்
றருவா யெனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே.

என்னுந் திருப்பாடலிற் காட்டி அந்தத் திருவடிகளின் சிறப்புக்களை ஒரு பதிகம் முழுவதிலும் பாடியருளினர். இந்தப் பதிகத்திலும், ஒவ்வொரு பாட்டிலும் முதலிற் பெருமைகளைச் சொல்லி, இறுதியிலேதான் அப்பெருமைகளைக் காட்டியவை திருவடிகள் என்பதைச் சொல்லுகின்றார்.

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற னடித்தலமே.

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்
னிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலைகெடுத்துக் [னும்
கழலா வினைகள் கழற்றுவ காலவ னங்கடந்த
அழலா ரொளியன காண்கஐ யாற னடித்தலமே

பின்பு சிவபெருமான்மீது பற்றுண்டாக உடம்பையும் அதிலுள்ளகருவிகளையுஞ் சிவகரணமாக்கி எப்போதுங் கடவுளையே சேவிக்கும் முறையைக் கூறுகின்றார். இந்த உடம்பைக் கோயிலாகவும், மனதை வேலைக்காரனுகவும், நேர்மையைத் தூய்மையாகவும், இருதயகமலத்தை இலிங்கமாகவும், அன்பை நெய்யாகவும் பாவித்துக் கடவுளைப் பூசிக்கவேண்டும். அல்லது உடம்பை வீடாகவும், மனத்தைத் தகளியாகவும், அறிவை நெய்யாகவும், உயிரைத் திரியாகவும் கொண்டு ஞானத்தீயால் விளக்கேற்றினல் சிவஞானத்தைப்பெறலாம்.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக

நேயமே நெய்யும் பாலா நிறைய நீர்மைய வாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

இவ்வாறன்றி உடம்பை அதன் இயல்பான நிலையில் விட்டால் அது எல்லையில்லாத துன்பத்தையும் அச்சத்தையுங் கொடுக்கும். நடுவுடம்பாகிய குளம் ஒருமுழ நீளமும் அரைமுழ அகலமுமுள்ளது. உடம்பில் ஒன்பது துவாரங்களுள்ளன. அதனுள் ஐம்பொறிகளாகிய ஐந்து முதலைகளுள்ளன. அவைகளிடத்தில் அகப்பட்டால் தப்பமுடியாது.

ஒருமுழ முட்டகுட்ட மொன்பது துளையுடைத்தாய்
அரைமுழ மதனகல மதனில் வாழ் முதலை யைந்து
பெருமுழை வாய்தல்பற்றிக் கிடந்துநா னற்றுகின்றேன்
கருமுகி றவழுமாடக் கச்சியே கம்பனீரே.

உயிரைச் சிவமயமாக்கி உடம்பிலுள்ள கருவிகளைச் சிவகரணங்க ளாக்கிக்கொண்டால் ஒருவர் செய்யும் வினைகள் பற்றில்லாத வினைகளாகும் (நிஷ்காமிய கர்மம்). ஆதலால் அவ்வினைகள் வேண்டிய பயனைத் தருமோ தாராவோ என்று கவலைப்பட இடம் வாராது. அவ்வினைகள் ஆகாமியமாகவும் மாட்டா. அந்நிலையிலுள்ளவர்கள் சிவவசமாக இருத்தலால் அவரே அவர்களைத் தாங்குவாராதலால் தம்மைப்பற்றியும் எண்ணார்கள். இதுவே கவலையற்ற உத்தம வாழ்க்கை. * எவர்களும் நாடவேண்டியது. அப்

* தேசசேவை செய்வோர் இத்திருப்பாடலைக் கடைப்பிடிப்பார்களாயின் அச்சம், கவலை, நெறிக்கேடு முதலிய அல்லல்களினின்று நீங்கி எல்லையில்லாத ஊக்கத்தோடும் களிப்போடும் முயன்று இடர்களையெல்லாந் துணைகளாக்கி சிந்தையில் நினைந்தவெல்லாம் செய்தும் பெற்றும் இந்திரராவார்கள்.

பர்சுவாமிகள் இவ்வாய்மையைப் பாடும்போது சிவத்தையும் சிவத்துக்கினியதாகிய அருட்சத்தியையும், சத்திக்கினியதாகிய ஆறுமுகப்பொருளையும் § தியானிக்கின்றார்.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டனடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

அப்பர்சுவாமிகள் கற்போர்க்கு மெய்யறிவைப் புகட்டியதோடு நில்லாமல் ~~தம்முடைய அநுப~~வத்தை விட்டுச் சமண சமயத்தைச் சேர்ந்த மயக்கத்தைப் பத்து அரிய மொழிகளால் விளக்குகின்றார். அவற்றுட் சில, கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன், முயல்விட்டுக் காக்கைபின் போனவாறு, விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறு, கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறு என்பன. இவைகளடங்கிய பதிகம் திருவாரூர்ப் பழமொழிப் பதிகம் எனப்படும். திருவதிகைத் திருநேரிசையிலும், நரிவரால் கௌவச் சென்று நற்றசை யிழந்த தோற்றம் என்றும், உற்றலாற் கயவர் தேறார் என்னுங் கட்டுரையோ டொத்தேன் என்றும், தழலே நீர் மடிக் கொள்ளன்மின் என்றும் பழமொழிகளை உபயோகித் தருளினர்.

மெய்யெலாம் வெண்ணீ று சண்ணித்த
மேனியான் தாள் தொழாதே
உய்யலா மென்றெண்ணி யுறி தூக்கி
யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்

§ ஆறுமுகமூர்த்தி அருட்கடலென்பதை, "மூவிருமுகங்கள்போற்றி முகம்பொழி கருணை போற்றி", என்பதாலறிக.

கொய்புலா மலர்ச்சோலைக் குயில்கூவ
    மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து
    கனியிருக்கச் சாய்கவர்ந்த கள்வனேனே.

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
    டென்னை யொருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
    டென்னுள்ளங் கோயி லாக்கி
அன்பிருத்தி யடியேனை [illegible] கொண்
    டருள்செய்த வாரூரர் தம்
முன்பிருக்கும் விதி யின்றி
    முயல்விட்டுக் காக்கைபின் போனவாறே.

கதியொன்று மறியாதே கண்ணழலத்
    தலைபறித்துக் கையிலுண்டு
பதியொன்று நெடுவீதிப் பலர்காண
    நகைநாணா துழிதர் வேற்கு
மதிதந்த வாரூரில் வார்தேனை வாய்
    மடுத்துப் பருகி யுய்யும்
விதியின்றி மதி யிலியேன்
    விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே.

மறுத்தானோர் வல்லரக்க னீரைந்து
    முடியினொடு தோளுந் தாளும்
இறுத்தானை யெழின்முளரித் தவிசின்மிசை
    யிருந்தான்றன் றலையி லொன்றை
யறுத்தானை யாரூரி லம்மானை
    யாலால முண்டு கண்டங்
கறுத்தானைக் கருதாதே
    கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே,

நரிவரால் கவ்வச்சென்று நற்றசை யிழந்த தோற்றந்
தெரிவரால் மாலசிந்தை திர்ப்பதோர் சிந்தை செய்வார்
வரிவரா லுகளுந் தெண்ணீர்க் கழனிசூழ் பழனவேலி
யரிவரால் வயல்கள் சூழ்ந்த வதிகை வீரட்டனாரே.

பற்றிலாவாழ்க்கைவாழ்ந்துபாழுக்கேநீரிறைத்தேன்
உற்றலால்கயவர்தேறாரென்னுங்கட்டுரையோடொத்தேன்
எற்றுளேனென்செய்கேனானிடும்பையால்ஞானமேதுங்
கற்றிலேன்களைகண்காணேன்கடவூர்வீரட்டனாரே.

குழலையாழ்மொழியாரிசைவேட்கையால்
உழலையாக்கையையூனுமுணர்விலீர்
தழலைநீர்மடிக்கொள்ளன்மின்சாற்றினோம்
மிழலையானடிசாரவிண்ணாள்வரே.

இவர் சிவபெருமான்மீது வைத்த பற்று கண்ணப்பநாயனாருடைய பற்றைப்போற் சிறந்திருந்தது. கண்ணப்பர் சிவபிரானை ஒரு குழந்தைபோலவுந் தம்மை யதன் தாய்போலவுங் கருதிச் சிவபெருமானுக்கு உணவு கொடுத்துக் காவல் செய்து கண்ணோய் வந்தபொழுது அதனையுந் தீர்த்தார். அப்படியே அப்பர்சுவாமிகளும் சிவபிரானை ஒரு மென்மையான குழந்தையாகக்கொண்டு அவருடைய திருவடி ○ தம்முடைய முரணை தலையிற் பட்டால் வருத்தமுறுமென்று எண்ணித் தாம் தமது தலையை ஒதுக்கியதாகப் பாடுகின்றார்.

---

○ கச்சியப்பசிவாசாரியசுவாமிகளும் முருகப்பிரானது மெல்லிய திருவடி தம்முடைய முரணை உள்ளத்திற்பட நிற்றலால் வருந்துமெனப் பாடியருளினர்.

பஞ்சிதனின் மெல்லடி பணிப்பவரை யின்பாற்
குஞ்சரி நடந்தசெயல் கூறுபுது மைததோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி நீயே
னெஞ்சக வடுக்கலினு னன்றலவு மென்றால்.

உய்த்தகாலுதயத் தும்பருமையவனைடிக்கந்திர
வைத்தகாலரக்கனைதன்வான்முடிதனக்குநேர்ந்தான் [மேல்
மொய்த்தகான்முகிழ்வெண்டிங்கண்மூர்த்தியென்னுச்சிதன்
வைத்தகால்வருந்துமென்றுவாடிநானைந்துங்கினேனே.

அப்பர்சுவாமி வேறொரு சமையத்தில் சிவபெருமானை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்தார். அந்த நாயகி அவரிலே கொண்ட மையலினால் ஒருவரையும் மதிக்கின்றாளில்லையென்றும், அவருடைய பெயரைச் சொன்னவுடனே அவளுடைய மனமும் உடம்புஞ் சோர்ந்து கை வளையல் கழலுகின்றனவென்றும் பிறவாறும் ஒரு பதிகமடங்கப் பாடுகின்றார்.

பஞ்சின்மெல்லடிப்பாவையோர்பங்கனைத்
தஞ்சமென்றிறுமாந்திவளாரைபம்
அஞ்சுவாளல்லளாவடுதண்டுறை
மஞ்சனேடிவளாடியமையலே.

குழலுங்கொன்றையுங்கூவிளமத்தமுந்
தழலுந்தையலோர்பாகமாத்தாங்கினான்
அழகனாவடுதண்டுறையாவெனக்
கழலுங்கைவளைகாரிகையாளுக்கே.

இப்படியன்றியும் சிவபிரானிலேகொண்ட பற்றுமிகுதியால் அவரைப் பரிகசித்தும் வெருட்டியும் நிந்தாஸ்துதியாகவும் பாடுகின்றார். அவர் சொல்லுகிறார்: "சிவபிரானுடைய திருமுடி ஒன்றே கொன்றைப்பூ விருத்தலினால் முல்லைக் காடாகவும், தலையெலும்பிருத்தலாற் சுடலையாகவும், கங்காநதி செல்லப்பெறுதலாற் கடலாகவும், பாம்பிருத்தலாற் புற்

றாகவும், சந்திரனிருத்தலால் வானமாகவும் விளங்குகின்றது". *

அங்கட்கடுக்கைக்குமுல்லைப்புறவமுறுவல்செய்யும்
பைங்கட்டலைக்குச்சுடலைக்களரிப்பருமணிசேர்
கங்கைக்குவேலையரவுக்குப்புற்றுக்கலைநிரம்பாத்
திங்கட்குவானந்திருவொற்றியூரர்திருமுடியே.

இந்தத் தேவாரத்திலும் எழுவாயை இறுதியிலே வைக்கும் இவரது சிறந்த வழக்கத்தைக் காணலாம்.

வேறோரிடத்தில் சிவபெருமான் இல்லாததனையுஞ் சொல்லுவார் என்று வைத்துக்கொண்டு அவருடைய சொல்லுக்கு மாறாகத் தமக்குப் பல சாக்ஷிகளுண்டென்று கூறுகின்றார்: "நீ என்னை உன்னுடைய ஆஸ்தியாக ஏற்றுக் கொண்டாய். இதை நீ மறுக்கில் இவ்வுலகம் முழுவதும் என்பக்கத்துக்குச் சாக்ஷியாகும். அன்றியும் சாதனங்களிருக்கின்றன. ஐம்பொறிகளுக் கென்னை ஒற்றிவைத்தாய். பின்பு அந்த ஒற்றியை மீண்டு நீ சொந்தமாக்கினாய்".

என்றுகொண்டாயென்னையெம்பெருமானினியல்லமென்னிற்
சான்றுகண்டாயிவ்வுலகமெல்லாந்தனிமையினென்றென்னை
யூன்றிநின்றைவர்க்கொற்றிவைத்தாய்பின்னையொற்றியெல்லாஞ்
சோன்றுகொண்டாய்கச்சியேகம்பமேயசுடர்வண்ணனே.

---

* மாணிக்கவாசகசுவாமிகளும் சிவபெருமான்மீது நிந்தாஸ்துதியாக:

சிரிப்பிப்பன் சீறும்பிழைப்பைத் தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்டாய் விடின்வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப்பிச்சன் நஞ்சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்சனென் றேசுவனே.

என்று பாடியருளினார்.

சிவபெருமானை நிந்திக்கிறதுபோலத் துதித்து ஒரு பதிகம் முழுவதும் பாடியிருக்கின்றார். (திருவையாறு- திருநேரிசை). அந்த நிந்தாஸ்துதிகளுட் சில, சிவபெருமானுக்கு நஞ்சல்லாமல் உணவில்லை, தானல்லாமற் றுணையுமில்லை, தொண்டர் நெஞ்சல்லாது கோயிலில்லை, அன்பல்லாது பொருளில்லை, அவர் காயப்படுத்திய வீரர் மன்மதனன்றி வேறெவருமில்லை என்பனவாம். இப்பதிகத்துள் ஒரு பாடல் வருமாறு:—

சகமலாதடிமையில்லைத்தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்டர்
அகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே.

குழந்தைகளிலே மிக்க அன்புள்ளபோது அவர்களை ஆசை வார்த்தையாற் கள்வன் என்பது வழக்கம். இந்த வழக்கத்தோடியைய, சிவபெருமானைச் சம்பந்தசுவாமி "என்னுள்ளங்கவர் கள்வன்" என்றும், மாணிக்கவாசகசுவாமி "அன்பருள்ளங் கரந்துநில்லாக் கள்வனே" என்றும் கள்வன் என்பதற்கு நியாயங்காட்டிப் பாடினர். அப்பமூர்த்தி ஒரு நியாயமுமின்றி எல்லையில்லாத பற்றினால் பின் வருந் திருக்குறுந்தொகையுள் அவரைக் கள்வனென்றனர்.

வெள்ளைநீறணிமேனியவர்க்கெலாம்
உள்ளமாயபிரானுறைவிடம்
பிள்ளைவெண்பிறைசூடியோர்சென்னியான்
கள்வன்சேர்கடம்பூர்க்கரக்கோயிலே.

மேலேகாட்டப்பட்டவைகள் அப்பர்சுவாமிகளுடைய பாடல்களுட் சிலவற்றிலுள்ள சிறப்புக்களாம். ஸ்தாலீபுலாக முறைப்படி அவருடைய திருப்பாடல்கள் யாவும் இத்தன்மையனவென்று கொள்ளலாம். அவருடைய திருப்பாடல்

களைப் படித்துப் பெறும் ஆனந்தம்மாத்திரமே இந்தப் பிறவி யெடுத்ததற்குப் போதும் போதும் என்று படிப்போரெவரும் சொல்லுவர். அவருடைய வாழ்க்கைச் சரிதையை வாசித்தலும் நினைத்தலும் இதிற் குறையாத இன்பத்தைத் தரும். ஆதலால் சுடுமணலில் நடந்து வருந்துவோரை நிழலுக்குப் போங்கள் என்று சொல்லுவது அவசியமில்லாதவாறுபோல வீண்முயற்சிகளிற் சென்று கவலைகளுந் துன்பங்களும் அடைந்து வருந்தும் உலகத்தினரை அப்பர் சுவாமிகளுடைய திருச்சரிதையையும் திருப்பாடல்களையும் படித் தின்புறுங்களென்று பிறரொருவர் சொல்லவேண்டுவதில்லை.

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
றூனதுவாய் நிற்குந் தரம்.

(எம் நெஞ்சிலே) நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க.

அப்பர்சுவாமிகள் திருவடி வாழ்க.

---